**<u>2026 ஜூலை மாதம் 22– ஆம் தேதி புதன்கிழமை</u>**

**<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>**

**<u>O.S. நெம்பர் : 181/2025</u>**

O.S. No.: 181/2025 – தமிழழகன் த/பெ.வெள்ளைச்சாமி PW1 22.07.2026

**<u>சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc., வரை படித்துள்ளேன். நான் எங்கு, எத்தனை ஆண்டுகளாக வசித்து வருகிறேன் என்றால் போடிநாயக்கனூரில் சீனிவாச நகர், வி.ஐ.பி.நகர், க.எண்.5–ல் நான்கு வருடங்களாக வசித்து வருகிறேன். நிரூபணவாக்குமூலத்திலும், வழக்குரையிலும் நான் வசித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது வேறு விலாசம் என்றால் சரிதான், வழக்கு தாக்கல் செய்யும்போது பூர்வீக வீட்டில் குடியிருந்து வந்தேன், தற்போது தனியாக வசித்து வருகிறேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன்.

2. எனது பெயரில் என்னென்ன சொத்துக்கள் உள்ளன என்றால் நிலம் உள்ளது. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் பெரியமாயத்தேவர் மற்றும் வெள்ளைச்சாமித்தேவர் ஆகியோர்களுக்கு இடையே பொதுச்சொத்தை பாகம் பிரிப்பதாக எழுதப்பட்டுள்ளது என்றாலும், பூர்வீகச் சொத்தை பாகப்பிரிவினை செய்வதாக எழுதப்படவில்லை என்றால் கருத்தவீரத்தேவரின் தந்தை வழி பாத்தியப்பட்ட சொத்தை பெரியமாயத்தேவர் மற்றும் வெள்ளைச்சாமித்தேவர் பிரித்துக்கொண்டார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பொதுச்சொத்தை பாகம் பிரிப்பதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சாட்சி வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள எழுத்துக்கள் படிக்க இயலவில்லை என்று கூறுகிறார்.

3. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.12 ஆவணங்களான பட்டா, வீட்டுவரி, குழாய்வரி எனது தந்தை வெள்ளைச்சாமியின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டு, அவரால் அனுபவிக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தந்தையின் காலம்வரை வீட்டுவரி, குழாய்வரி, கிஸ்து ஆகியவற்றை எனது தந்தை செலுத்தி வந்தார் என்றால் நாங்கள் பணம் கொடுத்தோம், செலுத்திவந்தார். எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அவர் தனித்து அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல, பூர்வீகச் சொத்தாகும். 1956ம் ஆண்டில் பாகப்பிரிவினை செய்யப்பட்டு, முழுமையாக வெள்ளைச்சாமி தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றாலும், அவருக்கு முழு உரிமை உள்ளது என்றால் சரிதான், தற்போது நாங்கள் வீடு கட்டி, குடியிருந்து வருகிறோம்.

4. வீடு கட்டி, ஆழ்துளை கிணறு அமைத்ததற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை எந்த ஆண்டு இறந்துபோனார் என்றால் 2019ம் ஆண்டாகும். எனது தந்தைக்கு உடல் உபாதைகள் இருந்ததா என்றால் இருந்தது. உடல் உபாதைகள் இருந்தது என்பதை காட்ட ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது, அவர் போடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். அவ்வாறு ஆவணம் உள்ளதாக பொய்யாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள புகைப்படம் எனது தந்தையின் புகைப்படம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் எந்த தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் 11.02.2016 ஆகும். எனது தந்தை இறப்பதற்கு 3 வருடங்களுக்கு முன்பு பதிவு செய்யப்பட்டுள்ளது

என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணப்படி எனது தந்தை எனக்கு ஒரு சொத்து எழுதிவைத்துள்ளார் என்றால் ஒரு சொத்தை எனக்கும் என்னுடன்பிறந்த 5 சகோதரர்களுக்கும் சேர்த்து எழுதி வைத்துள்ளார், சகோதரிகளுக்கு கொடுக்கவில்லை. நிரூபணவாக்குமூலத்தில் பத்தி 7–ல் எனது தந்தை உயில் எழுதிய சமயத்தில் படுத்தப்படுக்கையாக இருந்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நோய்வாய்பட்டிருந்தார்.

6. எனது தந்தை எந்த மருத்துவரிடம் வைத்தியம் பார்த்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் மருத்துவர் சந்திரசேகர் மற்றும் போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனையில் மருத்துவம் பார்த்து வந்தார். எனது தந்தை எந்த உடல் உபாதைக்காக வைத்தியம் பார்த்து வந்தார் என்றால் ஆரம்ப கட்டத்தில் காசநோயால் பாதிக்கப்பட்டிருந்தார், ஞாபகமறதியில் அவதிப்பட்டு வந்தார். மேற்சொன்ன உடல் உபாதைகள் குறித்து மருத்துவ ஆவணங்கள் என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியாது, சாட்சிகளை விசாரிக்க முடியும். எனது தந்தைக்கு எந்த உடல் உபாதைகளும் இல்லாததாலும், ஆவணங்கள் இல்லாததாலும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. பத்திரம் பதிவு செய்யப்பட வேண்டும் என்றால் பத்திர பதிவு அலுவலகத்திற் நேரடியாக செல்ல வேண்டும் என்றால் சரிதான். எனது தந்தை வா.சா.ஆ.2 பத்திர பதிவு சமயத்தில் நேரடியாக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றார் என்றால் சரிதான். வழக்குரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் எனது தந்தை படுத்தப்படுக்கையாக இருந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது பொய் என்றாலும், வா.சா.ஆ.2 ஆவணம் அதனை நிரூபிக்கும் என்றால் சரியல்ல. அந்த ஆவணம் எழுதப்பட்ட 3 ¼ காலத்திற்கும் திடக்காத்திரமாக

தனித்து செயல்படும் அளவிற்கு எனது தந்தை இருந்துள்ளார் என்றால் சரியல்ல.

8. எனது தந்தை இறக்கும்வரை 1வது லக்க சொத்தில் வசித்து வந்தார் என்றால் சரிதான். 1வது லக்க சொத்தில் எனது தந்தையுடன் 1ம் பிரதிவாதியும் மற்றும் அவரது மக்கள் 2 முதல் 4 பிரதிவாதிகள் சேர்ந்து கூட்டாக வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தந்தைக்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் சமரட்சணை செய்து வந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு 1 முதல் 4 பிரதிவாதிகள் எனது தந்தைக்கு சமரட்சணை செய்து வந்ததால், அவர் விருப்பப்படி வா.சா.ஆ.2 உயில் சாசனம் எழுதியுள்ளார் என்றால் சரியல்ல.

9. வா.சா.ஆ.2 ஆவணம் குறித்து எனக்கு எப்போது தெரியும் என்றால் 05.05.2025ம் தேதி எனது தாத்தா பெயரில் இருந்த சொத்து கூட்டுப்பட்டாக மாறியபோது, தாசில்தார், டி.ஆர்.ஓ., மற்றும் காவல் கண்காணிப்பு அலுவலகத்தில் நில அபகரிப்பு பிரிவில் மனுக்கொடுத்தபோது, அவர்கள் என்னிடம் சொன்னார்கள். போடிநாயக்கனூர் சார்பு நீதிமன்றத்தில் 14.06.2025ம் தேதி அ.வ.எண்.147/2025 வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 3 இலக்க சொத்துக்களுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கை ஏன் வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்றால் சொத்து மதிப்பு அதிகம் என்பதால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

10. போடிநாயக்கனூர் சார்பு நீதிமன்றத்தில் 14.06.2025ம் தேதி அ.வ.எண்.147/2025 வழக்கில் வா.சா.ஆ.13 பிராதில் என்னுடைய பங்கை பொறுத்து உயில் சாசனம் செல்லாது என்று பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல, உயில் செல்லாது என்று பரிகாரம் கோரினேன். இவ்வழக்கு பிராது பரிகாரத்தில் உயில் forged, fabricated and tainted with fraud என்று எழுதப்பட்டு,

அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தந்தை உயிருடன் இருந்த காலம்வரை வா.சா.ஆ.2 ஆவணத்தை ரத்து செய்யவோ, மாற்றி அமைக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை முழு விருப்பத்தின் பேரில் எழுதியதால் அவ்வாறு செய்யவில்லை என்றால் சரியல்ல.

11. தாவா 3, 4 லக்க சொத்துக்கள் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்பது குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 1956ல் எழுதப்பட்ட சொத்தாகும். 1956ம் தேதிய வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும், பிராது வழக்குரை 3, 4 லக்க சொத்துக்களுக்கும் வெவ்வேறு சொத்துக்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1–ல் உள்ள தாவா 3, 4 லக்க சொத்துக்குரிய சர்வே எண்ணும், பிராது 3, 4 லக்க சொத்துக்களுக்குரிய சர்வே எண்ணும் பைமாஸ் எண்ணும் வெவ்வேறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1–ல் பைமாஸ் எண்.1103 என்றுள்ளது, வழக்குரை 3, 4 லக்க சொத்துக்களுக்கு பைமாஸ் எண்.1102 என்றுள்ளது என்பதால் இரண்டும் வெவ்வேறு சொத்துக்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 22.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.22 17:34:50 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
22.07.2026.